සියලුම හිමිකම් ඇවිරිණි
*All Rights Reserved*

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ் மொழியும் இலக்கியமும் - දෙමළ භාෂාව හා සාහිත්‍ය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி** I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) ஒளிப்பெருக்கு ஓர் அழகு என்றால், இருளின் நிறைவு தனி வசீகரம். இங்கு வசீகரம் என்பதன் ஒத்தகருத்து,
   1) வாசனை 2) வெளிச்சம் 3) கவர்ச்சி 4) ஒளி

2) வெயிலே நமக்கு துணையாகும். இங்கு வெயில் என்பதன் எதிர்ப்பதம்,
   1) வெப்பம் 2) மழை 3) குளிர்ச்சி 4) கோடை

3) அப்பம், கப்பம், செப்பம், தெப்பம் இலைகள் எவ்வகைச் சொற்கள்,
   1) எதுகை 2) உவமை 3) உருவகம் 4) மோனை

4) தொலைக்காட்சிப் பெட்டி என்பது எவ்வகைப் பெயர்ச் சொல்
   1) ஆக்கப் பெயர் 2) தொழிற்பெயர்
   3) கூட்டுப் பெயர் 4) வினையாலணையும் பெயர்

5) மெய்யெழுத்துக்களில் இனவெழுத்து இல்லாத தொகுதி,
   1) வல்லினம் 2) மெல்லினம் 3) இடையினம் 4) மெய் எழுத்து

6) மக்கள் விடிய விடியக் காத்திருந்தனர், விடிய விடிய எனும் அடுக்குத் தொடர் உணர்த்தும் பொருள்,
   1) மிகுதி 2) அச்சம் 3) அவலம் 4) எல்லை

7) Vibrator (வைப்ரேடர்) என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
   1) எதிரி 2) அதிரி 3) அச்சம் 4) அதிசயம்

8) கை, இறகு, காய் என்பன எவ்வகைப் பெயராகும்.
   1) பொருட்பெயர் 2) குணப்பெயர் 3) தொழிற்பெயர் 4) சினைப்பெயர்

9) வியாபாரி சுவையான மாம்பழங்களை விற்றான். இதில் இடம் பெற்றுள்ள அடைமொழி,
   1) மாம்பழம் 2) சுவையான 3) வியாபாரி 4) விற்றான்

10) பறவைகள் வான் வெளியில் பறந்தன என்பது
   1) கூட்டு வாக்கியம் 2) கலப்பு வாக்கியம்
   3) தனிவாக்கியம் 4) தொடர் வாக்கியம்

11) 'செய்யும் தொழிலே தெய்வம்" எனும் பாடல் இடம் பெற்ற நூல்,
   1) ஆயிரத்திலொரு வீடு 2) ஆலமரம்
   3) வீராப்பு 4) ஆனுக்கொரு வீடு

12) கேட்போர் மனதில் கருத்தோட்டத்தினை உண்டாக்கும் வண்ணம் சரளமாக உரையாற்றுவது,
1) செய்தி 2) பேச்சு 3) சொற்பொழிவு 4) உரையாடல்

13) துங்கக் கரிமுகத்துத் தூமணியே ………………. என்பதில் துங்கம் என்பது,
1) உயர்ச்சி 2) மழை 3) கற்பனை 4) தோல்வி

14) விட்டிசைக் குறிக்குரிய இன்னொரு பெயர்,
1) அரைப்புள்ளி 2) காற்புள்ளி 3) மேற்கோட்குறி 4) சிறுகோடு

15) எறும்பின் உடல் எத்தனை பகுதிகளை கொண்டது,
1) ஏழு 2) நான்கு 3) மூன்று 4) ஐந்து

16) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்,
1) தேவி சோறு சமைத்தாள் 2) குமரன் எழுதினான்
3) குமுதினி இனிமையாகப் பாடினாள் 4) நண்பன் மிக வேகாக ஓடினான்.

17) அகிலன் பாடசாலைக்குச் செல்வான்.
அகிலன் நூலகத்துக்குச் செல்வான். இவ்வாக்கியங்களை இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்,
1) உம் 2) ஆனால் 3) ஆகவே 4) எனினும்

18) வான் குருவயின் கூடு கட்டுரையின் ஆசிரியர் யார்?
1) அகிலன் 2) குமரதாஸ் 3) கேஸ்வரன் 4) பெருமாள் முருகன்

19) வழுவற்ற சொல்லை தெரிவு செய்க. 1) ஏழனப் பார்வை 2) ஏளனப்பார்வை 3) ஏழனப்பார்வை
4) ஏலனப்பார்வை

20) பின்வருவனவற்றுள் பொதுப் பெயர்,
1) மண்வெட்டி 2) மாமரம் 3) கணினி 4) மலர்

21) உறவு முறைக் கடிதத்தில் இடம் பெறாத விடயம்,
1) தலைப்பு 2) முகவரி 3) விளிப்பு 4) விடயம்

22) பனை, ஈச்சை,கமுகு என்பவற்றின் இலை,
1) இலை 2) தாள் 3) ஓலை 4) புல்

23) யானை செலுத்துபவன் பாகன் எனப்படுவது போல கப்பல் செலுத்துபவன்,
1) வலவன் 2) மீகாமன் 3) விமானி 4) ஆயன்

24) ஆறு, இடம், எல்லை, காரியம் எனும் பொருள் குறிக்கும் ஒரு சொல்,
1) துறை 2) துரை 3) மரை 4) மறை

25) கடிதம் என்பதற்கு பயன்படுத்தக்கூடிய மற்றோர் சொல்,
1) பனுவல் 2) நுதல் 3) திருமுகம் 4) அறிமுகம்

26) தந்தை மகளுக்கு எழுதிய கடிதத்தின் வகை?
1) நிறுவனக் கடிதம் 2) உறவுமுறைக் கடிதம்
3) தொழில் முறைக்கடிதம் 4) விண்ணப்பக் கடிதம்

27) நான் கேம்ப் கட்டணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். கேம்ப் என்பதன் தமிழ்ச் சொல்,
1) விடுதி 2) முகாம் 3) பாடசாலை 4) கருத்தரங்கு

28) முயல் சிங்கத்திடம் சென்றது. இதில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபு,
1) இடம் 2) இல் 3) ஐ 4) ஆல்

29) விளி வேற்றுமை என்பது,
1) முதலாம் வேற்றுமை 2) ஐந்தாம் வேற்றுமை
3) ஏழாம் வேற்றுமை 4) எட்டாம் வேற்றுமை

30) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குற வைத்தால் ஒரு கட்டுக்கோப்பான பந்தியொன்று உருவாகும்.அவ்வாறு பந்தியை அமைப்பதற்குமிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) அதில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும்
ஆ) தினமும் நாம் உழைத்திட வேண்டும்
இ) உழைத்திட வேண்டும். யாவருக்கும் நல்ல எதிர்காலம் உண்டு
ஈ) குலமானத்தைக் காத்திட வேண்டுமாயின்

1) ஆ,இ,அ,ஈ 2) அ,ஆ,ஈ,இ 3) ஆ,ஈ,இ,அ 4) ஈ,அ,இ,ஆ
(30 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களில் கட்டுரை வரைக.
   1) செய்யும் தொழிலே தெய்வம்
   2) பத்திரிகையின் முக்கியத்துவம்
   3) நீங்கள் பார்த்து இரசித்த இயற்கைக் காட்சி
   4) சூழலைப் பாதுகாப்போம் (20 புள்ளிகள்)

2. பின்வரும் இரண்டு வினாக்களுள் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து விடை எழுதுக.
   1) விபத்தொன்றில் பெற்றோரை இழந்த நண்பன்/. நண்பிக்கு ஓர் ஆறுதல் கடிதம்
   *அல்லது*
   2) உங்கள் பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்படவுள்ள சஞ்சிகை ஒன்றிற்கான விளம்பரம் (15 புள்ளிகள்)

3. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) ‘வியக்கும் மனம் வேண்டும்’’ எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
   2) தனி வாக்கியம் என்றால் என்ன? இரு உதாரணங்கள் தருக.
   3) நல்ல சொற்பொழிவின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   4) செயப்படுபொருள் குன்றா வாக்கியம் என்றால் என்ன? ஒரு உதாரணம் தருக.
   5) ‘எல’லோர்க்கும் ஒவ்வொன்று எளிது’’ என்பதை வலியுறுத்துதற்கு ஔவையார் கையாளும் உத்தி யாது? (15 புள்ளிகள்)

4. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.
   1) விடிய வடிய
   2) வீடுவீடாக
   3) ஓடிஓடி
   4) சுடச்சுட
   5) பக்கம் பக்கமாக (10 புள்ளிகள்)

5. சரியான விடையினை இணைக்குக.

| | |
|---|---|
| 1. காரணப் பெயர் | • நாற்காலி |
| 2. இடுகுறிப்பெயர் | • தென்னை மரம் |
| 3. காரண இடுகுறிப் பெயர் | • அவள் |
| 4. சிறப்புப் பெயர் | • மீன்கொத்தி |
| 5. மாற்றுப்பெயர் | • கடல் |

(10 புள்ளிகள்)

6. இடைவெளி நிரப்புக.
   i. இராமன் எய்த ...........................(கனை/ கணை) யால் வாலி தனது ..................... (வாள்வை/ வாழ்வை) இழந்தான்.
   ii. ................................ (அரம்/ அறம்) போதித்த எம் முன்னோர் வழிநிற்போம்.
   iii. திருமண வீட்டு உணவினை நாம் ..............................(வயிறாற/ வயிறார) உண்டோம்.

(10 புள்ளிகள்)

7. 1) விளி வேற்றுமைக்கு ஓர் உதாரணம் தருக?
   2) உறவு முறைக் கடிதத்தின் உறுப்புகள் எவை?
   3) இரட்டைக்கிளவிச் சொற்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)